**கோறளைப்பற்று பிரதேச சபை**
**மட்டக்களப்பு மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் மார்ச் 29 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை 2019 ஆம் ஆண்டு மே 08 ஆந் திகதி தவிசாளருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து நிதிக்கூற்றுக்களில் 2018 ஆம் ஆண்டு திசெம்பர் 31 இல் பிரதேச சபையின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றிலினையும் இலங்கை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

#### 1.3.1 கணக்கீட்டு கொள்கைகள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையினால் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்காக பின்பற்றப்பட்ட கணக்கீட்டு கொள்கைகள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை | நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்காக பின்பற்றப்பட்ட கணக்கீட்டு கொள்கைகள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப் பட்டிருத்தல் வேண்டும். | Vw;Wf;nfhs;sg; gl;Ls;sJ. |

#### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்கீட்டுக் குறைபாடுகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| அ. சபையில் பொறியியந்திரங்களும், வாகனங்களும் மொத்தமாக 41 காணப்படுகின்ற போதிலும் அவை ஒவ்வொன்றினதும் பெறுமதி விலை மதிப்பீடப்பட்டு திணைக்களத்தினால் மதிப்பீடு செய்யப்பட்டு இறுதிக் கணக்கிற்கு கொண்டுவரப்படாது | விலைமதிப்பு திணைக்களத்தில் மதிப்பீடு செய்யப்பட்டு சரியான பெறுமதி கணக்கிற்கு கொண்டு வரப்பட வேண்டும். | நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

| | | |
|---|---|---|
| அவற்றில் மொத்த பெறுமதி ரூபா 12,534,720 மட்டுமே வெளிப்படுத்தப்பட்டுள்ளது. | | |
| ஆ.காணிக்கட்டிடங்கள் விலை மதிப்பீட்டு திணைக்களத்தினால் பட்டியல் படுத்தப்பட்டு பெறுமதி மதிக்கப்பட்டு இறுதிக் கணக்கிற்கு கொண்டுவரப்படவில்லை. | விலைமதிப்பு திணைக்களத்தில் மதிப்பீடு செய்யப்பட்டு சரியான பெறுமதி கணக்கிற்கு கொண்டு வரப்பட வேண்டும். | நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| இ.வாசகர்களால் மீள ஒப்படைக்கப்படாத ரூபா 391,801 பெறுமதியுடைய 3139 புத்தகங்களும், பழுதடைந்த 1912 புத்தகங்களும் பெறுமதி மதிக்கப்பட்டு இறுதி புத்தக இருப்பில் இருந்து கழிக்கப்படாது சொத்தாக காட்டப்பட்டு வருகின்றது. | உரியவர்களிடம் இருந்து அறவிடப்பட்டு பதிவளிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| ஈ. பெறவேண்டிய முத்திரை தீர்வை ரூபா 5,758,400 இறுதிக் கணக்கில் வெளிப்படுத்தப்படவில்லை | பெறவேண்டியவைகள் இறுதிக் கணக்கில் வெளிப்படுத்த வேண்டும். | எதிர் காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். |
| உ. பெறவேண்டிய நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 1,018,568 இறுதிக் கணக்கில் வெளிப்படுத்தப்படவில்லை. | பெறவேண்டியவைகள் இறுதிக் கணக்கில் வெளிப்படுத்த வேண்டும். | எதிர் காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். |

## 1.4 இணக்கமின்மைகள்

### 1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ)1988ஆம் ஆண்டின் பிரதேச சபைகள் நிதி, நிருவாக விதிகள்.<br>(i) அத்தியாயம் I இன் பிரிவு 5(XII) | பணம்,களஞ்சியப் பொருட்கள் மற்றும் காசோலைகளில் கையொப்பம் இடல் என்பவை இரண்டு உத்தியோகத்தர்க | பிணை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர் காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | | |
|---|---|---|---|
| | ளுக்கு நிர்வாகரீதியாக ஒப்படைக்கப்பட்டிருந்த போதிலும் அவர்களிடமிருந்து பாதுகாப்பு பிணை பெறப்பட் டிருக்கவில்லை. | | |
| (ii) அத்தியாயம் X இன் பிரிவு 193 | ஆண்டுக்கான உள்ளபடியான வருமானம் மற்றும் செலவு தொடர்பான விபரங்கள் வரவு செலவு திட்டத்துடன் ஒப்பிடப்பட்டு முரண்பாட்டுக்கான விளக்கங்களை உள்ளடங்கிய கூற்று தயாரிக்கப்பட்டு கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப் படவில்லை. | கூற்று கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப் படவேண்டும். | எதிர் காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். |
| (அ) இலங்கைசனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணம் இல.1645 மற்றும் 1646 | வாகனங்களுக் குரிய ஓட்டக்குறிப்புக்கள் மற்றும் மாதாந்தப் மூலப் பொழிப்புக்கள் ஒவ்வொரு மாதமும் அடுத்துவரும் மாதத்தின் 15 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் சபையினால் பயன்படுத்தப்படும் வாகனங்களின் ஓட்டக்குறிப்புக்கள் மற்றும் மாதாந்தப் மூலப் பொழிப்புக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக் கவில்லை. | மாதாந்தம் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | வரும் காலத்தில் சமர்ப்பிக்கப்படும். |

## 2 நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்தை மிஞ்சிய வருமானம் ரூபா 5,573,659 ஆக இருந்ததுடன் அதற்கு எதிரான முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவீனத்தை மிஞ்சிய வருமானம் ரூபா 18,638,507 தொகையாக இருந்தமை நிதிவிளைவுகளில் ரூபா 13,064,848 பின்னடைவைக் காட்டுகின்றது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் வீதவரி, வாடகை அனுமதிப்பத்திரங்கள் ஏனைய வருமானங்கள் மொத்தம் ரூபா 28,025,288 அறவிடப்படாமல் நிலுவையாக காணப்படுகின்றது.

#### 2.2.2 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| அ. கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது வருமான சேகரிப்பில் பின்னடைவு காணப்பட்டது. கடந்த ஆண்டு மொத்தமாக ரூபா 28,025,288 தொகை நிலுவையாக காணப்பட்ட போதிலும் இவ்வாண்டு ரூபா 13,596,830 தொகை மொத்த நிலுவையாக காணப்படுகின்றது. இதனை சபையின் வருமானங்களுடன் ஒப்பிடும் போது பெரும் தொகையாக காணப்படுவதுடன் வருமான சேகரிப்பில் மந்த நிலையை காட்டுகின்றது. | நிலுவைகளை அறவிட துரித நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும். |

2.2.3 வீதவரி மற்றும் வரி

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 08 உல்லாசப் பிரயாண ஓட்டல்களிடமிருந்து திண்மக்கழிவகற்றல் வரி ரூபா 435,000 தொகை அறவிடப்படாமல் நிலுவையாக காணப்படுகின்றது. | நிலுவைகளை அறவிட துரித நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும். |

2.2.
4 வாடகைகள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| கடை வாடகை, சந்தைக் கடை வாடகை, நிலக் குத்தகை மற்றும் JCB வாடகை ரூபா 13,161,830 தொகை அறவிடப்படாது நிலுவையாக காணப்படுகின்றது. | நிலுவைகளை அறவிட துரித நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும். |

2.2.5 அனுமதிப்பத்திரக் கட்டணங்கள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சேகரிக்கப்பட்ட தொகையினையே பட்டியலிடப்பட்ட வருமானமாக காட்டப்பட்டுள்ளதினால் இதில் நிலுவைகள் எதுவும் காட்டப்படவில்லை. | நிலுவைகள் காட்டப்பட வேண்டும் | ஏதிர் காலத்தில் காட்டப்படும். |

2.2.6 ஏனைய வருமானம்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|

2.2.7 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணங்கள்

(அ) நீதிமன்ற தண்டப்பணம்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாகாண சபையின் பிரதம செயலாளர் மற்றும் அனைத்து அதிகாரிகளிடமிருந்தும் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 1,018,568 தொகையான நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் ரூபா 5,758,400 தொகையான முத்திரைக்கட்டணங்கள் பெறப்பட வேண்டியிருந்தன. | உரிய காலத்தில் அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏதிர் காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். |

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 செயலாற்றல்

செயற்பாடுகளின் செயலாற்றலின் தாமதங்கள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| I. 2017 ஆம் ஆண்டு கலைவாணி வீதியினையும், விபுலானந்தா வீதியினையும் இணைக்கும் வீதியினை வடிகானுடன் அமைப்பதற்காக ஓதுக்கீடு செய்யப்பட்ட ரூபா 02 மில்லியன் 2019 மார்ச் 31 வரையும் வீதி அமைக்க நடவடிக்கை எடுக்கப்படாது அப்பணம் சில்லறைக்கடன் கணக்கிலிடப்பட்டது. | ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை அந்த நோக்கத்திற்கு செலவிடப்பட வேண்டும். | கருத்து கூறவில்லை |
| II. கோரகலி மடு உப அலுவலக பின் வீதியினை அமைக்க 2017 இல் ரூபா 850,000 ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள போதிலும் 2019 மார்ச் 31 வரை அவ்வேலை ஆரம்பிக்கப்படாது அந்நிதி சில்லறைக்கடன் கணக்கிலிடப்பட்டுள்ளது. | ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை அந்த நோக்கத்திற்கு செலவிடப்பட வேண்டும். | கருத்து கூறவில்லை |

ஆ. நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ஐக்கிய நாடுகள் அமைப்பின் அங்கத்துவ நாடுகளின் அரச தலைவர்களின் தலைமையில் 2015 ஆம் ஆண்டு நிலைபேறான அபிவிருத்தி மகாநாட்டில் தீர்மானிக்கப்பட்டதன் பிரகாரம் சபையினால் 2030 ஆம் ஆண்டில் அடைந்து கொள்ளப்பட வேண்டிய அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் தொடர்பாக அளவிடுவதற்கான குறிகாட்டிகளை உருவாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சுற்று நிருபத்தின் படி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர் காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். |

இ. திண்மக்கழிவு முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| திண்மக்கழிவுகள் சரியான முறையில் முகாமைத்துவம் செய்யப்படாததினால் புதிதாக அமைக்கப்பட்டுள்ள திண்மக்கழிவு சேகரிப்பு நிலையத்துக்கான அனுமதிப்பத்திரம் மத்திய சுற்றாடல் அபிவிருத்தி அதிகார சபையிடம் இருந்து பெறப்படாததுடன் உக்கக்கூடிய கழிவுகளில் இருந்தும் கூட்டுப்பசளை தயாரிக்கப்படுவதில்லை. | அனுமதிப்பத்திரம் பெறப்பட வேண்டும். கழிவுகளில் இருந்தும் கூட்டுப்பசளை தயாரிக்கப்பட வேண்டும். | எதிர் காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். |

3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| அ. பதிவு செய்யப்பட்ட உல்லாச விடுதிகளில் இருந்து அவற்றின் மொத்த வருமானத்தில் 1% தீர்வை | தீர்வையை அறவிட நடவடிக்கை எடுக்கவேண்டும். | தீர்மானம் எட்டப்படவில்லை. |

| | | |
|---|---|---|
| 10 வருடங்களாக அறவிடப்படவில்லை. | | |
| ஆ. 83 தனிப்பட்டவர்களிடம் இருந்து அறவிட வேண்டிய வாடகை குத்தகை நிலுவை ரூபா 11,844,640 நீண்ட நாட்களாக 1993 இல் இருந்து அறவிடப்படாமல் நிலுவையாக காணப்படுகின்றது. | தீர்வையை அறவிட நடவடிக்கை எடுக்கவேண்டும் அல்லது சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும். | விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும். |
| இ. LA 3604 ம் இலக்க Gully Bowser 2010 ம் ஆண்டில் ஏற்பட்ட சிறு பழுது காரணமாக அதை உடன் திருத்த நடவடிக்கை எடுக்கப்படாததினால் 09 வருடங்கள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பின் ரூபா 01 மில்லியன் செலவிடப்பட்டு 2018 இல் திருத்தப்பட்ட போதிலும் உரிய ஆவணங்கள் பெறப்படாததினால் 2019 மார்ச் வரை மீண்டும் இயக்காமல் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. | உரிய நடவடிக்கை விரைவில் எடுக்க வேண்டும். | விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும். |
| ஈ. சபையில் மீளாய்வாண்டில் நடைமுறைக் கணக்கை பேணி வரும் காசேட்டின் படி ரூபா 25 மில்லியன் தொடக்கம் ரூபா 30 மில்லியன் வரையான வீச்சில் காசு மீதி கையிருப்பாக காணப்பட்ட போதிலும் இதனை வினைத்திறனான வகையில் முதலிட்டு வருமானத்தை உழைக்க நடவடிக்கை எடுக்காததால் சபையானது சராசரியாக ரூபா 02 மில்லியன் தொகை வருமானத்தை இழந்துள்ளது. | சரியான காசு மீதியை பேணி வருமானத்தை உழைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர் காலத்தில் கருத்தில் கொள்ளப்படும். |
| உ. மீளாய்வாண்டில் 23 வீதிகளுக்கு ரூபா 3,032,600 பெறுமதிக்கு கிறவல் இடப்பட்டுள்ளது. சில வீதிகளுக்கு வேலைகள் முடிவுற்ற பின்பே மதிப்பீட்டு அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளதுடன் அவற்றிற்கு கிறவல் முறையாக கெட்டியாக்கம் செய்யப்படாததினால் மழையினால் அவ் வீதிகள் விரைவில் சேதமடையக்கூடும். | சுரியான முறையில் மேற்பார்வை செய்து விரயத்தை தவிர்க்க வேண்டும். | எதிர் காலத்தில் கருத்தில் கொள்ளப்படும். |

3.3 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புகள் | | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| அ. | முன் அனுமதியும் அங்கீகாரமும் பெறப்படாது 2015 இல் 15 ஊழியர்களும், 2017 இல் 48 ஊழியர்களும் சேர்த்துக் கொள்ளப்பட்டிருந்தனர். இதனால் அங்கீகரிக்கப்பட்ட ஆளணிக்கு மேலதிகமாக 68 பேர்கள் காணப்படுகின்றனர். | மேலதிக ஆளணி சரியான முறையில் பயன்படுத்த வேண்டும். | எதிர் காலத்தில் கருத்தில் கொள்ளப்படும். |
| ஆ. | 05 வருடங்களுக்கு முன்னர் பதவியை விட்டுச் சென்ற 05 ஊழியர்களிடம் இருந்து அறவிட வேண்டிய ரூபா 221,952 கடன் தொகையை உரிய நபர்களிடமிருந்து அல்லது பிணையாளியிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது தொடர்ந்து நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டு வருகின்றது. | உரியவர்களிடமோ அல்லது பிணையாளிகளிடமோ இருந்து விரைவில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | விரைவில் அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

3.4 சச்சரவுத் தன்மையான கொடுக்கல் வாங்கல்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டுக்குரிய இறுதிக் கணக்கறிக்கையில் சில்லறைக் கடன் கணக்கில் ரூபா 1,813,900 கிறவல் வழங்கியதற்காக ‘‘ரம்மியா’’ விநியோகிஸ்த்தருக்கு கொடுக்கப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ள போதிலும் அவரால் கிறவல் வழங்கப்பட்டதற்கான ஆதாரம் எதுவும் இல்லை | விசாரணை செய்து உடனடியாக பொருத்தமான நடவடிக்கை எடுக்க வேண்டும். | சரியான கருத்து கூறவில்லை. |

3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

3.5.1 சொத்துக்களை பதிவேட்டில் உட்படுத்தாமை

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| சபையானது தனக்கு உரித்தான சகல காணி கட்டிடங்களை இனங்கண்டு அவற்றை அடையாளப்படுத்தி வைத்திருக்க உரிய நடவடிக்கையினை மீளாய்வாண்டு வரை எடுத்திருக்கவில்லை. | சொத்துக்களை இனம் கண்டு நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர் காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். |

3.6 இனம் காணப்பட்ட நட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 05 நூலகங்களில் வாசகர்களால் பெற்றுக் கொள்ளப்பட்டு மீள ஒப்படைக்கப்படாத ரூபா 391,801 பெறுமதியுடைய 3139 புத்தகங்கள் தொடர்பில் அவற்றினை மீளப் பெற்றுக்கொள்ளவோ அல்லது அதற்கான பெறுமதியினை உரிய நபர்களிடமிருந்து அறவிட நடவடிக்கையோ எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நட்டங்களை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |
| மீளாய்வாண்டில் தெரு மின் விளக்குகள் பொருத்துவதற்காக ரூபா 1,514,815 செலவிடப்பட்டுள்ளது. இதன் போது பெறுவனவுகள், வழங்கல்கள் நிதிப் பிரமாணம் 751(1) இற்கு அமைய ஏடுகளில் முறையாக பதியப்பட்டிருக்கவில்லை. தேவையையும், பொதுமக்களின் கோரிக்கையும் கருத்தில் கொள்ளாது தேவைக்கு அதிகமாக கொள்வனவு செய்யப்பட்டுள்ளதுடன் கேள்வி நடைமுறைகள் முறையாக பின்பற்றப்படாததினால் ரூபா 66,500 கொள்வனவின் போது சபைக்கு இழப்பு ஏற்பட்டுள்ளது. | நட்டம் அறவிட வேண்டும். | முடிவு எடுக்கப்படவில்லை. |

3.7 பெறுகை

3.7.1 பெறுகைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டுக்கான பெறுகைத் திட்டம் தயாரிக்கப்பட்டு அதன்படி பெறுவனவுகள் இடம் பெற்றிருக்கவில்லை. | வருடாந்தம் இத்திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். | எதிர் காலத்தில் தயாரிக்கப்படும். |

3.7.2 ஒப்பந்த நிர்வாகம்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 2016 ஆம் ஆண்டில் சபைக்குரிய காணியில் சந்தைக் கட்டிடம் அமைக்க ஒப்பந்தம் செய்யப்பட்டு ரூபா 924,053 கொடுப்பனவு செய்யப்பட்ட பின் வேறு ஒருவர் சட்டபூர்வமற்ற முறையில் உரிமை கோரியதினால் வேலைகள் இதுவரை தொடங்கப்படவில்லை. | உடனடியாக சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. |

**பாதைகளுக்கு கிறவல் இடல்**

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| நிதி ஆணைக்குழுவின் 2016/01 ஆம் இலக்க 2015 திசெம்பர் 30 ம் திகதிய சுற்றறிக்கையில் 1.2 ஆம் பந்தியின் பிரகாரம் மூலதன நிதியின் கீழ் அபிவிருத்தி திட்டங்களை நடைமுறைப்படுத்தும் போது உள்ளூராட்ச்சி அதிகார சபை வீதிகளை அமைக்கும் போது கிறவல் இடுதல் மற்றும் தற்காலிக பாதை அமைத்தல் | சுற்று நிருபம் பின்பற்றப்பட வேண்டும். | எதிர் காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | |
|---|---|---|
| ஆகியவற்றை தவிர்த்து அதிக காலம் பயன்படுத்தக்கூடிய வகையில் கார்பட் இடல், தார் இடல் அல்லது கொங்கிறீட் இடுதல் மேற் கொள்ளல் வேண்டும் என கூறப்பட்டிருந்த போதிலும் அதற்கு முரணான வகையில் மீளாய்வாண்டில் சபையினால் 23 வீதிகளுக்கு ரூபா 3,032,630 செலவில் கிறவல் இடப்பட்டிருந்தது. | | |

3.7.3 பெறப்பட வேண்டியவை கொடுக்க வேண்டியவை

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| அ. மீளாய்வாண்டில் பல்வேறு நோக்கங்களுக்காக முற்பணமாக கொடுக்கப்பட்ட ரூபா 949,991 தொகையினை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட் டிருக்கவில்லை. | துரிதமாக அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது |
| ஆ. ஒன்பது உல்லாசப் பிரயாண ஒட்டல்களிடமிருந்து அறவிட வேண்டிய திண்மக்கழிவு அகற்றல் கட்டண நிலுவை ரூபா 435,000 தொகையினை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | துரிதமாக அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது |
| இ.சபைக்கு சொந்தமான JCB இயந்திரத்தினை வாடகைக்கு வழங்கிய 21 தடவைகளில் அரச நிறுவனங்கள் மற்றும் தனிநபர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 1,310,600 தொகையினை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட் டிருக்கவில்லை. | துரிதமாக அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது |

## 4 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மதிப்பிடப்பட்ட வருமானத்தை விட மிகக் குறைந்தளவான வருமானமே அறவிடப்பட்டமையானது வருமான பாதீடு ஒரு கட்டுப்பாட்டு கருவியாக பயன்படுத்தப்படாமை என்பது அவதானிக்கப்பட்டது. | கடந்த காலங்களையும் எதிர் காலத்தையும் கருத்தில் கொண்டு தயாரிக்கப்பட வேண்டும். | எதிர் காலத்தில் கருத்தில் கொள்ளப்படும். |

| | மதிப்பிடப்பட்டது | உண்மையானது | வேறுபாடு |
| --- | --- | --- | --- |
| வரிகள் | 16,672,000 | 525,770 | 16,146,230 |
| வாடகைகள் | 14,345,000 | 9,989,969 | 4,355,031 |

### 4.2 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 1987ம் ஆண்டின் 15ம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் படி உள்ளகக் கணக்காய்வு பகுதி ஒன்று ஏற்படுத்தப்பட்டிருக்கவில்லை. | உள்ளக கட்டுப்பாடு பிரிவு ஏற்படுத்தப்பட வேண்டும். | நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

### 4.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்கள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| கணக்காய்வு முகாமைத்துவ குழுக்கூட்டம் கால் ஆண்டுக்கொருமுறையாவது கூட்டப்பட வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டில் எதுவித கூட்டமும் கூட்டப்படவில்லை. | கணக்காய்வு குழுக் கூட்டம் கூட்டப்பட்டு பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்பட வேண்டும். | நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |